DUPLICATE

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

**சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.**

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**
யாழ்ப்பாணப் பட்டினம்: ஆ 1-க்கு ரூ. 5-60
வெளியூர், இந்தியா: " ரூ. 9-40
தொலைவாய்ப்பகுதி: " ரூ. 9-40
தனிப்பிரதி: சதம் 6
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**
முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-40
" அரைக்கலம் ரூ. 5-00
" கால்கலம் ரூ. 3-15
" ஒரு அங்குலம் சதம் 65
அடுத்த முறைகட்கு டை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கூ௫. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரி௵ மார்கழிமீ ௩௨ (1923 டிசெம்பர் 20) வியாழக்கிழமை. { இலக்கம்—௬௭.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்!
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் ளேறு
மதம்பூத்தவிநாயகன்றுள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

யாழ்ப்பாணம்
## சைவபரிபாலனசபையாராற் பிரசுரஞ் செய்யப்பெற்ற
## புத்தக விளம்பரம்.

| | ரூ. ச: |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது) | க0 |
| இரண்டாம் பாலபாடம் " | க௫ |
| மூன்றும் பாலபாடம் " | உ0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ௪0 |
| ஆறும் பாலபாடம் .... ... ... | ௫0 |
| கலாமஞ்சரி எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிவிற்கற்"வகுப்பிலும் பயிலும்மாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இயற்றப்பெற்றுள்ளது. விளக்கத்துடன்... | ௭௫ |
| கலாமஞ்சரிவிளக்கம்(மாத்திரம்) | ௩0 |
| கிருட்டிணன்றூது, உரையுடன் | ௮௫ |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கிள மொழிபெயர்ப்புடன்)... ... ... | கஉ |
| இலக்கண வினுவிடை... ... ... | க0 |
| நிகண்டு கக-வதும் கஉ-வதும் ... | உ௫ |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | உ௫ |
| திருச்செந்தூர்ப்புராணவுரை கிளேஸ்காகிதம் ... ... ... | க-உ௫ |
| றவ்காகிதம்... ... ... ... | க-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | க0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | கஉ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | கஉ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | க0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ... ... ... ... ... | க0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியப்திப்பு) | ௬ |
| குமணசரித்திரம் " | ௬ |
| பஞ்சாத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | க0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | க0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது ஏட்டுப்பிரதியின்படி அச்சிடப்பெற்றது... ... ... ... ... | க௫ |
| மறைசையந்தாதி ... ... ... | உ0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்

சபையாராலச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணூர்பண்ணை, S. S. சண்முகம், M. S. துரை, பிறிற்ருனியா ஸ்ரோர், சாஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப்பிள்ளை, வீ. எம். கந்தசாமி இவர்களிடமும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணூர்பண்ணை,

[ESTABLISHED 1909].
**MESSRS. A. S. M. A. KHADER BROTHERS**
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்கு ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாகத்தவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது சபையுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது
உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லா இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், தாதுவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடிய இமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய பலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபால்செலவு இல்லை. பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜுக்கு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷை குருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!
விலைசரசம்! உடைநயம்!! அருமையான தினுசு!!!

## சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்காணுக்களும், நயம் 120 கெ. 100 கெ. 80 கெ. நூலில் பலகலர் பட்டினுலும் வெள்ளி ஜரிகையினுலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினுலும் ஜரிகையினுலும் பலவிதமான முந்திகள்போட்டதும் முந்தியில்சிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமுந்தியில் ஜரிகையினுல் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் நெசவு அழுத்தமாகவும் கோட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம்,
ஜவுளி சேலம்,
Javuli Salem.

கா. கோ. அ. வெ. கு. ஒபுளிசெட்டியார் & Co,.
ஜவுளிவியாபாரம் கொகை சேலம்.
(Q. 44)

### காசிதாடா சேலை.

16 முழ நீளம்; 2½ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

### வெள்ளிக்கெண்டைச்சால்வை.

5½ முழ நீளம்; 2½ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினுல் நெய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

### மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரிக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீங்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இனபத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

### மூலத்திற்கு குருநாகபஸ்பம்

ஆப்றேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாத முள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### இருமலுக்கு குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

### பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மேடல்கள் பெற்ற
C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மேடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.

உலகெங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது
புஷ்டிக்கு கைகண்ட
### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரு. 10. 50 பில்ஸ் ரு. 4-0-0
20 பில்ஸ் ரு. 2. வி. பி. சார்ஜ் வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரு. 2.

### பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வாராது. புட்டிக்கு ரு 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரு. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q 41 வைத்) தியசாலை, பழனி. S. I.

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோத்காரி௵ மார்கழி௴ 5௳ வியாழக்கிழமை.

## ஆத்திரமானாலும் அபிமானம் காத்திரம்.

யாழ்ப்பாணப் பட்டின வாசிகளாகிய நாங்கள், எங்கள் கடமைகள் எல்லாவற்றிலும் பார்க்க அத்தியாவசியகம் செய்ய வேண்டிய ஒரு விசேட கடமையை இப்பொழுது கையேற்று நடத்தவேண்டியவர்களாக விருக்கின்றேம். அக்கடமையானது ஒருவராலேனும் இருவராலேனும் செய்து முடிக்கக்கூடியதன்று. ஒரு கூட்டத்தினரால் அல்லது ஒருசமயத்தவராற்றானும் செய்யக்கூடியதன்று. அக்கடமை யாதெனின் எங்களை இதுகாறும் அடிமைப்படுத்தித் தீமையான செய்கைகளுக்கெல்லாம் வழிகாட்டியா யிருந்து எங்களையும் எங்கள் நாட்டையும் அடுத்துக் கெடுத்த பாமசண்டாளனாகிய அந்நிய நாட்டு மதுபானத்தை முற்றாக நீக்கி விடுதலே ஆகும். இவ்விஷயத்தில் மதுவிலக்குச் சபையார் தீவிரமாக முயற்சித்து வருகிறார்களாயினும் பட்டின வாசிகள் எல்லோரையும் ஒ[illegible]ப்படுத்தக்கூடிய கிளர்ச்சிகளைப் பிரசங்க வாயிலாகவும் துண்டுப் பத்திரங்கள் வாயிலாகவும் பரவச் செய்தல் வேண்டும். நிற்க,

இப்பாமசண்டாளனை மருந்தென்று குடித்து விருந்தென்று கொண்டாடி இருந்திருந் தருந்தி இப்பொழுது மீளா அடிமையானேர்க்கும், இதனை விற்றுப் பொருள் ஈட்டும் வியாபாரிகளுக்கும் மதுவிலக்குச் சபையாருடைய செய்கைகளினால் ஆத்திரம் உண்டாகுமானாலும், அச்சபையார்களுடைய நோக்கம் எங்களுக்கும் எங்கள் நாட்டுக்கும் பெரு நன்மை பயக்குமென்பதை எவர்களும் மறுக்க மாட்டார்கள். அந்நிய தேச மதுபானத்தை நீக்கப்போகிறார்களாம் என்ற வார்த்தையைக் கேட்ட வியாபாரிகள் எங்கள் வாயில் மண் விழுந்தது எனத் தீர்மானித்து மாத்திலிருந்து விழுந்தவனைப் போலப் பிரக்ஞைபற் றிருக்கும்பொழுது எதிர்க்கட்சியினர் அவர்களை, அந்நிய நாட்டு மதுக்கடைகளை வைத்திருப்பவர்களென்றும் அபிமான மற்றவர்களென்றும் இன்னோரன்ன வார்த்தைகளால் இகழுதல் அம்மாத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்தல்போலாகும். இந்த அந்நிய நாட்டுக் குடிவகைக் கடைகள் திறக்கப்பட்ட காலத்தில் இப்போதிருக்கும் மதுவிலக்குச் சபைகள் போன்ற சபைகள் இருந்திருந்தால் இவர்கள் ஒருபோதும் அந்நிய தேச மதுபானக் கடைகளை வைத்து நடத்த முன்வந்திருக்கமாட்டார்கள். அமரிக்காவிலும் ஜெர்மனி இங்கிலாந்து முதலிய மேலைத்தேசங்களிலும் உள்ள அறிவாளிகள் மதுபானத்தினால் மனிதருக்கு மோசமும் நாசமுமேயன்றி அற்ப சுகந்தானு மில்லையென்று மதுபானத்தை வேரோடு நீக்கிவிட்ட சங்கதி எங்கள் வியாபாரிகளுக்கு நன்றாகத் தெரியும். இதனை எங்கள் நாட்டிலிருந்து துரத்துதல்வேண்டு மென்பதே அவர்களுடைய உள்ளக் கிடக்கை யென்பது திண்ணம். இக்காலத்திலே பெருத்த லாபத்தைக் கொடுக்கக்கூடிய புதிய தொழில்கள் அநேகமாக இருத்தலினால் மதுபானக் கடையை மாத்திரம் அவர்கள் நம்பி யிருக்கவேண்டியதில்லை. தங்கள் வியாபாரத்துக்குக் கேடுவருகிறதே என்று திகைப்புற்ற சில வியாபாரிகளுக்காக எங்களையும் எங்கள் பிற்சந்ததியாரையும் எங்கள் தேசத்தையும் அதோகதியாக்குவது ஒருபோதுங் கூடாது. எங்கள் யாழ்ப்பாணத்தை எல்லாரும் மதிக்கும்படி வைத்தல் தமிழ்மக்களாகிய எங்கள் கடமையாகும்.

நமது யாழ்ப்பாண வாசிகள் இந்தத் தேச கைங்கரியத்தை மதுவிலக்குச் சபையார் செய்து முடிக்கவேண்டுமென்று நினைப்பது முறைமையாகாது இது அவர்கள்மாத்திரம் சுமக்கக்கூடிய சுமையன்று. அந்நியநாட்டுமதுபானத்தை நீக்கவேண்டுமென்ற கிளர்ச்சியை மூட்டும் ஸ்தானங்களாகப் பட்டினபரிபாலன எல்லைக்குள்ளிருக்கும் கல்லூரிகள் இருத்தல்வேண்டும். இக்கல்லூரிகளிலுள்ள ஆசிரியர்களும் உயர்தரமாணவர்களும் இவ்விஷயத்தில் முன்னுக்கு வருதல்வேண்டும். மதுபானப் பிரியர்களோடும் வியாபாரிகளோடும் பகைமை பாராட்டுதல் ஒருபோதுங் கூடாதாம்; இனிமையான தண்ணளி வார்த்தைகளினால் அவர்களுக்கு உண்மையை எடுத்து விளக்கிக்காட்டுதல் அத்தியாவசியகமேயாம். "மெல்லெனப் பாயுந் தண்ணீர் கல்லையு முருகச்செய்யும்" என ஆன்றோர் வாக்கிருப்பதினால் கல்லினாற் செய்யப்படாது மிருதுவான வஸ்துக்களாற் செய்யப்பட்ட அவர்களுடைய மனதை உருகச்செய்வது ஒருபோதுங்கஷ்டமாயிருக்கமாட்டாது.

எனவே தருமவழியிற் பொருள் ஈட்டக்கூடிய மார்க்கங்கள் பற்பலவிருப்ப அந்நியதேச மதுபானம் நீக்கப்பட்டால் எங்களுக்குப் பிழைப்பில்லையே என்று கொள்ளும் ஆத்திரத்திலும்பார்க்க அம்மதுபானம் நீக்கப்பட்டு நாங்களும் எங்கள் தேசமும் ஈடேறவேண்டுமெனக் கொள்ளும் அபிமானமே காத்திரமாகும்.

"எல்லாரும் இன்புறிருக்க நினைப்பதுவே யல்லாமல்வேறென் றறியேன்பராபரமே" என்ற வாக்கியம் எல்லாருடைய உள்ளத்திலும் பசுமரத்தாணிபோற் பதிவதாக.

அந்நியநாட்டு மதுக்கடை நீக்க விஞ்ஞாபனத்தை இற்றைப் பிரசாத்திற் பிறிதோரிடத்து வெளியிட்டிருக்கின்றேம். அபிமானிகள் அதனை நோக்குவார்களாக.

## ஆன்ம விசாரம்.

(ஓர் பிராமணோத்தம ஸாது எழுதியது)

இடம் பொருள் ஏவல் முதலிய உதவிகள் எவ்வளவுக்கிருக்குமோ அவ்வளவுக்கும் ஈசுரன்மேல் நினைப்பும் தேவையும் உண்டாகாது.

குத்து வலிப்பு எரிவு தெண்டல் முதலான நோய்களால் ஆற்றாது குளறுகிறவனும், கோபம் பொறாமை களிப்பு முதலான துர்க்குணங்கள் மேற்கொண்டு ஆற்றாது கடுஞ்சொல் பழிமொழி புறங்கூறல் முதலானவற்றால் குழறுகின்றவனும் அமமாவர். ஆதலால் அவரைப்போலவே இவரிடத்தும் நாம் இரங்கக்கடவேம்.

இரக்கங்காரணமாகப் பிறர்க்கு எதும் போதனைசெய்ய மனம் ஏவுமானால் அதை ஈசுரனிடஞ் சொல்லி நடத்திக்கொள். உனக்கு அஞ்ஞானங்கள் முழுதும் அகலு மட்டும் நீ வாய் திறக்கலாகாது.

நீ பிறருக்கு ஒன்றைப் பேசப் புகும் பொழுதும் ஒன்றைச் செய்யப்புகும் பொழுதும் அது அவர்க்கு எத்தகையதா யிருக்கும் என்பதை முன்பு யோசித்துக் கொள்.

எந்த எந்தப் போகத்தையும் நுகர்ந்து திருப்திபெற்றபின் உண்டாகும் பற்றறுதியே திறமானது. ஒரு போகத்தைவிரும்புகிறவன் அதை நீரவேண்டும்— மெய்யுணர்வால் பற்றறுதி கூடுமோனால் ஆகட்டும். அச்சத்தினால் அடங்கியிருந்தவர்களெல்லாம் பின்பு நுகர்ந்தே தொலைப்பார்கள்.

அருள் அன்பு என்னும் இரண்டனுள் அன்பு பொய் யென்பது மெய்யுணர்ந்தார்க்கே நன்கு புலப்படும். பிறரைக் கொண்டு நமக்கு ஊழ்வினைப் பயனாக இன்ப துன்ப மென்னும் இரண்டையும் ஊட்டுகிறவர் ஈசுவரனே. அந்த உண்மையை விளங்காமல் இன்பந் தருபவர்களில் அன்பும், துன்பந் தருபவர்களில் பகைமையாகிய வன்பும் கொள்வது அறியாமை. ஒரு பிறப்பில் நமக்கு அன்புடையார் என இருந்த மனைவி மக்கள் உற்றார் என்போர் மறுபிறப்புகளிலும் அங்ஙனம் ஆகின்றார்களா? இல்லையே. இவையெல்லாம் ஈசனது திருவிளையாட்டு ஒரு பிறப்பிற்றானே அன்புடையார் பகைஞராகவும், அவர் அன்பினராகவும் சம்பவிக்கின்றதே. தீவினை நுகருங் காலத்தில் உறவினரும் பகைவராம்; நல்வினை நுகர்ச்சியில் பகைவரும்உறவினராம். ஆதலால் அன்பென்பது பொய். பிறஜ்வர்களையெல்லாம் தானாகப் பாவிப்பதாகிய அருளொன்றே மெய். அஃதொன்றே நமக்குத் தெய்வகுணம்.

மெய்யுணர்வாளி ஒருவன்றான் தன் ஆசை கோபம் முதலிய துர்க்குணங்களைத் திருத்தவல்லவன். மற்றவர்கள் எதையும் அனுபவித்தே திருந்தவேண்டும்.

பேச்செல்லாம், தன்னை மதிப்பதாகிய அகங்காரம் பிறருக்கு அதை இருக்கச் சகியாமையாகிய அழுக்காறு என்னும் இரு காரணங்களுங் கொண்டே நிகழ்வவாயின.

தாய் தந்தை முதலான சகல பாசமும் ஈசுவரன் ஆட்டிய இப்பிறப்புக்கூத்து, எல்லாவற்றிற்கும் ஈசனே காரணனென்று குடும்பம் முதலான சகல பாசங்களிலும் பற்றற்று நில். இயலாதாயின், தாய் எல்லாரையும் தாய் எனவும் தந்தை எல்லாரையும் தந்தை எனவும் மைந்தர் எல்லாரையும் மைந்தர் எனவும் சகோதரர் எல்லாரையும் சகோதரர் எனவும் இம்முறையே எல்லாரிடத்தும் அன்புசெய்து பக்ஷபாதமற்றவனாய் நில்; அருளாளனவை.

ஒருவன் தன்னைச் சரிப்படுத்துவது முழுதும் நடுவுநிலைமையினாலேயே யமைய வேண்டும். அருளென்பதும் அதுவே.

உனது துர்க்குணங்களையெல்லாம் மெய்யுணர்வா லகற்று. இயலாதாயின் பிறர்க்கும் இத் துர்க்குணங்கள் இங்ஙனமே ஒழித்தற்கு எளிதானவல்ல வென்று உண்மையுணர்ந்து நடுநின்று உன்னைப் போலவே பிறரையும் பாவித்து அவர்களுடைய துர்க்குணங்களுக்காக அவர்கண் மேல் இரங்கு.

மெய்யுணர்வாளனிடத்துள்ள திருத்த வினங்கள் குறைகூறுதற்கிடமாமன்றி அஃதில்லாதவனது திருத்தவினங்கள் குறைகூறுதற்கிடமாகா. அச்சங் காரணமாகவும் தனக்குச் சுகத்தை வேண்டியும் ஒருவனிடத் துளதாகுந் திருத்தங்கள் மதிப்புக்கிடமாகா.

பேச்செல்லாம் தன்னை மதித்தலும் பிறனைத் தாழ்த்தலுமாயிருக்கின்றன.

ஒரு நோயாளி ரோகத்தால் வருந்தும் போது, தக்க ஔஷதம் இல்லையேயென்று நாம் இரங்குகிறேம். அதுபோல, கோபம் பொறாமை களிப்பு முதலான துர்க்குணனுக்கு அவை நீர்ந்து சுகப்பட மெய்யுணர்ச்சி கிடைக்கவில்லையே யென்று அதற்காக நாம் இரங்கவேண்டும்.

உனது சுகத்துக்காக நீ பிறனைத் திருத்த முயல்வது அயோக்கியம்.

## பயங்கரமான களவுகள்.

யாழ்ப்பாணத்திலே விசேஷமாக வண்ணார்பண்ணைப் பகுதியிலே, சில வாரங்களாகப் பயங்கரமான பெருங் களவுகள் நடந்து வருகின்றன. மாலைக் காலத்தில் அதிசெல்வராக நித்திரைக்குச் சென்றவர்கள், அதிகாலையில் தம் பொருளெல்லாக் திருடருக்குப் பறிகொடுத்தவர்களாய்ப் பெருந் தரித்திரராய் உடுத்த சீலையுடன் கண்ணீருங் கம்பலையுமாகநின்று தயங்குகின்றார்கள். இதனாற் சனங்களுக்குப் பெருந் திகிலும் அவமானமும் பொருளிழவும் ஏற்படலாயின. இங்குள்ள சனங்கள் எந்நேரமும் அச்சத்தோடுகூடவே நித்திரைக்குச் செல்கின்றனர். பொலிஸ் புலிகள் சஞ்சரிக்கின்ற இந்தப்பகுதியில் இப்படி நடக்குமானுற் பொலிஸ்காவலால் ஊரார்க்குநேரும் நன்மையாதெனப் புலப்படவில்லை. இங்கே "றட்" என்பவர் பொலிஸ் அதிகாரியா யிருந்த காலத்தில் இப்படிப்பட்ட அநர்த்தங்கள் வரவில்லையென்றும், இப்பொழுதிருக்கும் பொலிஸ் தலைமை உத்தியோகஸ்தரும் அந்தப் பிரபுவைப்போல அவதானமாகவிருந்தாலோ வென்று வயசின் முதிர்ந்தவர்கள் பேசிக்கொள்ளுகிறார்கள். சமீபத்திற் பொலீசர் நிற்கவே ஒரு வீட்டிற் களவு நடந்த செய்தியைச் சில மாசங்கட்கு முன்னர் இப்பத்திரிகையில் வெளியிட்டிருந்தோம். பொலிஸ் தலைமை உத்தியோகஸ்தர் இந்தக் களவு விஷயமாக அதிக சிரமத்தோடு உழைத்தல் வேண்டும். தலைமைக்காரரும் ஊரவர்களும் அவருக்குத் துணைபுரிதல் வேண்டும்.

## சமாசாரம்.

காலநிலை:— இன்று நன்மழை வருஷிக்கின்றது. இடையிடையே குளிர்காற்றும் வீசுகின்றது.

ஆருத்ரா தரிசனம்:— இப்புண்ணியதினம் வருகிற திங்கட்கிழமை நிகழும். சிதம்பர தரிசனம் இத்தினத்தில் விசேஷமானதாகும். அங்கு யாத்திரைசெய்ய இயலாதவர்கள் இங்குள்ள ஆலயங்களிற்சென்று அத்தினத்து நடராசப்பெருமானுக்கு நிகழும் விசேஷ அபிடேகம் பூசை உற்சவம் என்னும் இவற்றைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்வார்களாக.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி:— இக்கல்லூரி பொங்கல் விடுதலைகாட்களின் பொருட்டு நேற்று விடுதலை செய்யப்பட்டது. வருகிற ஜனவரி௴ 16௳ இனி ஆரம்பிக்கப்படும்.

இலங்கை வரவு செலவு:— சென்ற வருடத்திலே இலங்கையின் அரசிறை வரவு 9 கோடியே 30 லக்ஷம் ரூபா. செலவு 9,11,41,611 ரூபா. எஞ்சிய தொகை கையிருப்பு முதலோடு சேர்க்கப்படும்.

## அந்நியநாட்டு மதுக்கடைநீக்க விஞ்ஞாபனம்.

:o:

யாழ்ப்பாணத்திலும் பருத்தித்துறையிலு முள்ள அந்நியநாட்டு (பிராண்டி முதலிய) குடிவகைக் கடைகளின் பெயரையும், அவற்றை நீக்குதற்குச் சம்மதஞ் சொல்லும் உரிமையுடையவர்கள் வசிக்கும் ஊர்களின் பெயரையும், சென்று சம்மதஞ் சொல்லவேண்டியவர்கள் வசிக்கும் இடங்களின் பெயரையும், காலத்தையும் நமது வடமாகாண ஏஜண்டரவர்கள் பின்வருமாறு வெளியிட்டிருக்கின்றனர்:

| மதுக்கடை. | சம்மதஞ் சொல்வோர் வசிக்கும் ஊர். | சம்மதஞ் சொல்லுதற்கான இடம். | தேதி. | நேரம். |
|---|---|---|---|---|
| பருத்தித்துறை, அந்நிய நாட்டு மதுக்கடை. | பருத்தித்துறை; புலோலிமேற்கு, தெற்கு, கிழக்கு; தும்பளை; கற்கோவளம்; அல்வாய்வடக்கு. | 1. பருத்தித்துறை ரேகிலுவள பண்டகசாலை (இது அவ்வூர்ச் சுகாதாரசங்க எல்லையுள் வசிப்பவர்கள் சம்மதஞ் சொல்வதற்கு). | 1924-ம் ஆண்டு ஜனவரி௴ 16-ந்௳. | காலை 7 மணி தொடக்கம் மாலை 7 மணி வரையும் |
| | | 2. புலோலி இந்து ஆங்கில வித்தியாசாலை (புலோலி கிழக்கு, மேற்கு; அல்வாய் வடக்கு; தும்பளை; கற்கோவளம் என்னும் பகுதிகளில் வசிப்பவர்கள் சம்மதஞ் சொல்வதற்கு). | | |
| யாழ்ப்பாணப் பட்டினபரிபாலன சங்க எல்லையு ளிருக்கும் அந்நிய நாட்டு மதுக் கடைகள். | யாழ்ப்பாணப் பட்டின பரிபாலனசங்க எல்லைக்குட்பட்ட பகுதி (முழுவதும்). | 1. சோனகதெருத் தமிழ்ப் பள்ளிக்கூடம் (சோனக தெரு, வண்-தென்மேற்கு என்னும் பகுதிகளில் வசிப்பவர்கட்கு). | ஜனவரி௴ 19-ந்௳. | |
| | | 2. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (நாவாந்துறையுடன் வண்-வடமேற்கு, வண்-வட கிழக்கு, வண்-தென் கிழக்கு என்னும்பகுதிகளில் வசிப்பவர்கட்கு). | | |
| | | 3. யாழ்ப்பாணக் கச்சேரி விற்பனவு வங்களா (கல்லூர், சிவியாதெரு, சுண்டிக்குழி, கொழும்புத்துறை என்னும் பகுதிகளில் வசிப்பவர்கட்கு). | | |
| | | 4. யாழ்ப்பாணம் கத்தோலிக்கர் சங்க மண்டபம் Jaffna Cathalic Club (கரையூர், பட்டினம என்னும் பகுதிகளில் வசிப்பவர்கட்கு). | | |

☞ இந்த அரிய சமையத்தைத் தவறவிடவொண்ணாது; இச்சமையந் தப்பினால் எச்சமையம் வாய்க்குமோ, ஏது வருமோ அறிகிலேம்; குறிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் அபிமானிகள், மதுவிலக்குச் சங்கங்கள் இல்லாத இடங்களில் அவற்றைத் தாபித்து, பெரியார் சிறியர் நண்பர் பகைவர் செல்வர் வறியவர் என்னும் பேதமின்றி எல்லோரும் ஒருங்கு சேர்ந்து, பொருட் செலவு சிரமம் என்னுமிவற்றைச் சிந்தியாது இடையறு ஊக்கத்தோடு உழைப்பரேல், கடவுள் கிருபையால் இந்த நன்முயற்சியில் வெற்றியடைவது திண்ணம்; எங்கள் நாடு ஈடேறுவது சத்தியம்; வடமராட்சியிலுள்ளவர்கள் அதிக சாக்கிரதையா யிருத்தல்வேண்டும்; கள் சாராயத் தவறணைகளை நீக்கும் விஷயத்தில் அவர்கள் அபிமானமின்றிச் சோம்பலாக விருந்து ஏமாந்து பிரதிகூலமடைந்தவாறு, இந்த விஷயத்திலும் ஏமாந்துபோகவொண்ணாது; ஏமாந்தால் மீளா வசைக்கு ஆளாவர். ஆதலாற் சாவதானமா யிருத்தல்வேண்டும்.

விசேஷ புகைரதம்:—நத்தார் விடுதலை நாட்களில் யாழ்ப்பாணம் வருபவர்களுடைய வசதிக்காக ஒரு விசேஷ புகைரதத்தொடர் இந்த டிசம்பர்மீ 22உ சனிக்கிழமை மாலை 5-10-க்கு மருதானையிலிருந்து புறப்படும். 1924ஆ ஜனவரிமீ 2உ பிற்பகல் 3-20-க்கு ஓர் விசேஷ புகைரதத்தொடர் காங்கேயந்துறையிலிருந்து கொழும்புக்குப் புறப்படும்.

யாழ்ப்பாண மணியவேலை:—இராசாங்க ஒறுப்பனவுச் செலவைக்குறித்த கொம்மிற்றியார் தமது அறிக்கையில் யாழ்ப்பாண மணியவேலையையும் நிறுத்திவிடுவது புத்தியென அரசினருக்கு அறிக்கை செய்திருந்தனர். அவ்வறிக்கையின்படி அவ்வுத்தியோகம் 1925-ம் ஆண்டில் நிறுத்தப்படுமெனச்செய்திவந்திருக்கிறது. இப்பொழுது அவ்வுத்தியோகத்தை நடாத்துகின்ற ஸ்ரீ V. M. முத்துக்குமாரு முதலியாரவர்கள், அந்தக்காலத்திலே உத்தியோகத்தினின்றும் இளைப்பாறுகின்ற ஸ்ரீ M. S. இராமலிங்க முதலியாரவர்களிடத்திற்கு கச்சேரி முதலியாராவரென அறிகின்றோம்.

## கடிதம்.

### சிதம்பர விசேடம்.

### பௌஷ்கரஸம்கிதாபாஷ்ய அரங்கேற்ற மகோற்சவம்.

நிகழும் ருதிரோற்காரிஞு மார்கழித் திங்கள் தொடக்கத்திற்றானே திருவெம்பாவைத் திருமஞ்சனத் திருநாள் வருவதாயிற்று. தங்கள் தங்கள் கிருகங்களில் தைச்சங்கிராந்திக் கொண்டாட்டத்தை உத்தேசிப்பவர்களுக்கு இது சௌகர்யமேயாம். இத்திருநாள் மங்கள மகோற்சவத்தோடு இவ்விடம் ஸ்ரீமதாறுமுக நாவல ஸந்தானத்தில் ஸ்ரீமத் அம்பலவாணநாவல ஸ்வாமிகளால் வடமொழியில் பௌஷ்கராகம ஸம்ஹிதைக்கு தில்லைவாழந்தணர்களுள் ஒருவராகிய ஸ்ரீமத் உமாபதிசிவாசார்ய ஸ்வாமிகள் அருளிச்செய்த பாஷ்யம் அச்சிற்பதித்து முற்றுப்பெற்று 10-ம் திருநாளாகிய மார்கழிமீ 9உ சோமவாரத்தில் சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே திருவரங்கேற்ற மங்கள மகோற்சவம் செய்வதாக முயற்சிநடந்து வருவதாகக் கேள்வியுற்று மிகுந்த சந்தோஷமடைகினறோம். அது திருவருளால் செவ்வே முற்றுப்பெற்று இச்சைவ உலகம் இனபுறுவதாக.

இங்ஙனம்,
சிதம்பரம் ஸ்தலவாசி.

### "மலைமருந்து"க்கு.

இந்த டிசெம்பர்மீ 7உ வெளிவந்த "சத்திய வேத பாதுகாவலன்" பத்திரிகையில் "மலைமருந்து" எனக் கைச்சாத்திட்டு ஒருவர் "சைவரும் மிஷனரிமாரின்கல்வியும்" என்னுந் தலைப்பின்கீழ் யாழ்ப்பாணத்துள்ள சனத் தலைவர்களாகிய ஸேர் பொ. இராமநாதனவர்கள், ஸேர் அ. கனகசபையவர்கள், கௌரவஸ்ரீ துரைசுவாமியவர்கள், ஸ்ரீமாந் அ. சபாபதியவர்கள், என்னுமிவர்களைப் பெரிதுங் கண்டிக்கத் தலைப்பட்டிருக்கின்றார். மலைமருந்தின் கண்டனத்தில் அகப்படும்படி இப்பெரியார்கள் செய்த அபராதம் யாதென்னில் சில வாரங்கட்கு முன்னர் சாவகச்சேரிச் சைவாங்கில வித்தியாசாலையில் நிகழ்ந்த பரிசளிப்புக் கூட்டத்தில் இவர்கள் சமுகமாகவிருந்தபோது "சைவப்பிள்ளைகளுக்கு மிஷனமாரின் கல்வியால் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துக் காட்டி அவர்கள் (சைவப்பிள்ளைகள்) சைவப்பள்ளிக்கூடங்களிலேயே கற்கவேண்டுமென்பதை ஒவ்வொருவரும் நன்கு விரித்துக் கூறி" விட்டார்களாம். இவர்கள கூறிய இவ்வார்த்தைகள் மலைமருந்துக்குப் பெருவிருந்தாகி அப்பெரியார்களை அலர்தூற்றத் தொடங்கிக்கொண்டது. மலைமருந்தின் ஆபாச வாக்கியங்களையெல்லாம் இங்கே எடுத்துக்காட்டுவதனால் இந்த அரிய பத்திரிகையின் இடம் வீணுமென அஞ்சிச் சிலவற்றை மாத்திரம் எடுத்துக்காட்டி அம்மருந்தின் அறியாமையையும் புலப்படுத்துகின்றேன்.

"இட்டுத் தடியிலே கூர் பார்ப்பதுபோல சிலகாலந் தொட்டு சைவர் தாம் மிஷனரிமாராலே ஆள்ப்பட்ட பின்னர் அவர்களைத் தூஷிப்பதிலும் அவர்களிலே குறைகூறுவதிலுமே அனுவலாயிருந்துவருகிறார்கள், இனி அவர்களேன், அவர்களுடைய கல்வியேன். பள்ளிக்கூடங்களேன் என்பனவாக அவர்களைப் புறக்கணித்துப் பேசிவருகின்றார்கள்" என்று மலைமருந்து சைவரைப் புறங்கூறுகின்றது. சைவப்பிள்ளைகள் சைவப் பள்ளிக்கூடங்களிலேயே கல்விபயிலவேண்டுமெனவும் கிறிஸ்த பள்ளிக்கூடங்களிற் கல்வி பயிலவொண்ணாதெனவும் சைவர் சொன்னால் அது மிஷனரிமாரைக் குறைகூறுவதாகுமா? தூஷிப்பதாகுமா? விஷயத்தை மாறிச்சொல்லிப்பார்ப்போம். கிறிஸ்த பிள்ளைகள் கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களிலே படித்தல்வேண்டும், சைவப்பள்ளிக்கூடங்களிலே படிக்கவொண்ணாது என்று கிறிஸ்தவர் தங்கள் பிள்ளைகளுக்குப் போதித்தால் அது சைவர்களைக் குறைசொல்வதாகவும் தூஷிப்பதாகவும் புறக்கணிப்பதாகவும் முடியுமா? கிறிஸ்த பள்ளிக்கூடம் அயலிலேயிருக்க ஒரு கிறிஸ்தவப்பிள்ளை அதனையொழித்துச் சைவப் பள்ளிக்கூடத்திலே வந்து கல்விபயில மனம்பொருது அப்பிள்ளையையும் தம்பள்ளிக்கூடத்திற்கே இழுத்துச் சேர்த்துக்கொள்ளுங் கிறிஸ்தவருக்கும், நூற்றுக்குத் தொண்ணூறுவிகிதம் சைவப்பிள்ளைகள் கிறிஸ்தவப் பள்ளிக்கூடங்களிலே கல்வி பயின்றுவருவதையும் அதனால் வரும் அனர்த்தங்களையுமுணர்ந்து தஞ்சமயப் பிள்ளைகளைத் தஞ்சமய முறைப்படி படிப்பிக்க முயலும் சைவாபிமானிகட்கு மிடையே மலைமருந்துக்குப் பேதம் புலப்படாதுபோனமை யாதோ?

"தமிழ் மொழிக்குத் தமிழனே அதிகாரி, இங்கிலிஷ்மொழிக்கு இங்கிலிஷ்காரனே அதிகாரி, தமிழனில்லாத் தமிழ் சிறக்கமாட்டாது, இங்கிலிஷ்காரனில்லா இங்கிலிஷ் சிறக்கமாட்டாது" என்று மலைமருந்து கரைகின்றது. அது முழுவதுஞ் சரி. தமிழனில்லாத் தமிழ் சிறக்கமாட்டாதென்பது "மலைமருந்து" பத்திரிகையில் வெளியிட்டிருக்கும் தமிழ் வசனங்களைப் பார்ப்போர்க்கு நன்கு புலனாகும். "யாழ்ப்பாணத்திலே இங்கிலிஷ் பாஷைக்குரியவர்களான மிஷனரிமார் வந்து இங்கிலிஷ் கல்லூரிகளைத் தாபித்து, இங்கிலிஷ் பாஷையைப் படிப்பித்து வந்ததினாலேதான் அப்பாஷை நம்முடைய தமிழர் மத்தியிலே பிரகாசிக்கின்ற"தென மலைமருந்து இயம்புகின்றது. மிஷனரிமார்தாம் இங்கிலிஷ் பாஷைக்குரியவர்களென்ற கொள்கையை மலைமருந்துபோல்வாரன்றி அறிவுடையோர் அனுசரிக்க மாட்டார். என்று ஆங்கிலேயரால் இந்த நாடு பரிபாலிக்கப்படத் தொடங்கியதோ அன்று தொடக்கம் அவருடைய பாஷைக் கல்வியும் பிரசைகளாகிய எங்களுக்கு ஊட்டப்படுமென்பது நிச்சயம். கிணற்றுக்குள்ளிருக்குந் தவளைக்குத் தண்ணீர்ப் பஞ்சமுமுண்டா? மிஷனரிமார் வந்து யாழ்ப்பாணத்திலே ஆங்கிலத்தை விதைக்காவிட்டால் ஆங்கிலம் இங்கேமுளைத்து வளர்ந்து விருத்தியாகமாட்டாதென்பது மலைமருந்தின் மௌட்டிகமான கொள்கை. உண்மை அங்ஙனமன்று. நமது அரசாங்கத்தினர் இலங்கையிலுள்ள தமது பிரசைகளுக்குக் கல்வியூட்டத் தொடங்கியபோது இந்த மிஷனரிமார் உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசி "நாங்கள் இந்துள்ளார்க்குக் கல்வியூட்டுகினறோம் நீங்கள் நன்கொடைப் பணத்தைத் தாருங்கள்" என்று கேட்க, அரசினரும் அதற்கிசைந்து ஊரவர்கட்குக் கல்விபயிற்றும் பொறுப்பை, எங்கள் பொல்லாத காலம் காரணமாகப்போலும், அவர்களிடம்ஒப்பித்துவிட்டனர். இனி அக்காலத்திருந்த ஊரவர்களும் மிஷனரிமாரின் நோக்கமின்னதென்பதை உள்ளபடி விளங்கினரல்லர். மிஷனரிமார் தமது மனோரதங் கைகூடியதென வெண்ணி, கிராமங்கள் தோறும் சுயபாஷை வித்தியாசாலையையும், பட்டினங்கள் தோறும் அவ்வித்தியாசாலைகளோடு, ஆங்கில வித்தியாசாலைகளையும் ஸ்தாபித்துக் கொண்டுதாங்கள் வந்தகருமத்தைச் செய்யத் தலைப்பட்டார்கள். அக்காலத்திலும் சுன்னாகத்தில் வசித்த முத்துக்குமாரசாமி போன்றசிலர், இவர்கள் வலையிலகப்பட்டுப் பின்னர் ஒருவாறு இவர்கள் நோக்கத்தையுணர்ந்து, அவ்வலையினின்றுந்தப்பிச் சைவமாகிய பேரானந்தக்கடலுட் பழையபடி புகுந்து, "நல்லவழிகாட்டுவோம் உடுபுடைவை சம்பளம் நாளுநாளுந் தருவோம், நாஞ் சொல்வதைக் கேளுமென மருட்டியே ஞானஸ்நானமுஞ் செய்துவிட்டார். மெல்ல மெல்லப் பின்னர் வேலையிங்கில்லை நீர் வீட்டினிடை போமென்கின்றார்......இனியெம்மையெம்முற விஞேர் எட்டியும் பாரார்கள் கிட்டவும் வரார்கள் எற்பூட்டியுழவுமறியேம், அல்லலாமிம்மைக்குமறுமைக்கு நரகினுக் காளாகி மிகமெலிந்தோம், ஆபாரபரனேகிறிஸ்தவர் நம்மை யடுத்துக்கெடுத்தார்களே" யென்றுதாம் அறியாமையால்முன்னர்ச் செய்துள்ள கருமத்தின் பொருட்டுப் பெரிதும் பச்சாத்தாப முற்றனர். மிஷனரிமாரின் உண்மையான நோக்கத்தையும் அதனாற் சைவத்திற்கு விளைந்த தீமையையும் அக்காலத்திலே உள்ளபடியுணர்ந்து அவற்றைத் தடுக்கும்படி உழைத்துவந்தவர் ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களேயாவர். சாலாதியில் அறிவுடையோர் பலர், ஒளிர்வதெல்லாஞ் செம்பொன்னல்லவென்பதை உள்ளவாறேயுணர்ந்து கொண்டனர். இனியும் மலைமருந்து அது உண்மையாகப் பொன்றான் என்று நாட்ட முயன்றால் வாய்க்குமா? ஒருபோதும் வாய்க்காது! வாய்க்காது!!.

"இவர்கள் (தமிழர்) இங்கிலீஷ் எவ்வளவு படித்தாலும், மட்டியெருக்கலை மடல்மடலாய்ப் பூத்தாலும் மருக்கொழுந்து வாசனை வருமா" என, ஆங்கிலரன்றி அந்நியநாயுள்ளார் அப்பாஷையை எத்தனை நன்மையாகவும் அதிகமாகவுங் கற்றாலும் அவர்கள் சிறக்கமாட்டார்களென்னுங் கருத்துப்பொருந்த மலைமருந்து நவின்று தனது உலகவனுபவ மின்மையை வெளிப்படையாகக் காட்டித் தான் சொன்ன "மட்டியெருக்கலை.......... மருக்கொழுந்தின் வாசனை வருமா" என்னும் முதுமொழிக்குத்தானே இலக்காகின்றது. ஆங்கில பாஷையைக்கற்றுத்தேறிய அந்நியர் இக்காலத்துள்ள ஆங்கில வித்துவான்களுட் சிரேட்டம் பெற்றிருத்தலை மலைமருந்து கண்டிராவிட்டாலுங் கேள்விப்பட்டுமிருக்கவில்லையா? உலகத்திலே சிறந்த கவீந்திரராக மதிக்கப்பட்டு எல்லாராலுஞ் சன்மானிக்கப் பெற்று விளங்கும் இரவீந்திரநாததாகூர் ஆங்கிலசாதியிற் பிறந்தவரா? இன்றேற் பாதிரிமார் வகுப்பைச் சேர்ந்தவரா? மலைமருந்தே பகருதி! பகருதி!! யோசியாமற்பகருதி!!! இன்னும் ஆங்கில பாஷையிலே சிறந்துவிளங்கிய விளங்குகின்றஇந்துக்கள்பலரும் இலங்கைவாசிகள் சிலருமுளர் மிஷனரிமாரின் கல்வித்திறமையையும்பிறவும், "பருத்திக்காட்டுக்குச் செத்தத்துப்பட்டி பரமரகசியம்" என்றபிரகாரம் மலைமருந்து போல்வார்க்கு அபூர்வமாகக்காணப்படுமேயன்றி அறிவுடைய சைவநன்மக்கள் கண்களுக்கு அங்ஙனம் புலப்படா.

(வரும்).

இங்ஙனம்,
விண்ணாமிர்து.

### சாவகச்சேரி சைவ ஆங்கிள வித்தியாசாலை.

இவ்வித்தியாசாலையில் சென்ற கார்த்திகை மாசம் 26-ந் திகதி (11-12-23) செவ்வாய்க்கிழமை மாலை 6மணி தொடக்கம், பரமேஸ்வரக் கல்லூரி உபாத்திராசனராகிய ஸ்ரீ ஜீ. பீயர்ஸ் அவர்களால் 'சைவக் கல்வி' என்னும் விஷயமாக ஓர் பிரசங்கம் ஆங்கிலத்திற் செய்யப்பட்டது. பிரசங்கம் ஸ்ரீ சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

பிரசாரகர் அவர்கள், மிஷன்பள்ளிக்கூடங்களில் சைவப் பிள்ளைகள் படிப்பதனாலுண்டாகும் தீமைகள் யாவை என்பதனை விளக்கமாக எடுத்துக் கூறினர்.

முதலாவது மிஷன் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் அளவுக்கு மிஞ்சிய செலவு செய்யவும், அவசியமற்ற ஆடம்பரமான உடைகளைத் தரிக்கவும் பயின்றுகொள்கிறார்களென்றும், இச்செயல் அவர்களுடைய பிற்கால ஜீவியத்தைக் கெடுத்து அவர்களைக் கடன்காரராக்குகின்றதென்றுங் கூறினர்.

இரண்டாவதாக மிஷன் பள்ளிக்கூடப் பிள்ளைகள் மூத்தோரைக் கனம்பண்ணுவதையே பெருமை என்று எண்ணுகிறார்கள். மிஷன் பள்ளிக்கூட உபாத்திமார் மூத்தோரைக் கனம் பண்ணுதேயுங்கள் என்றுவது, அதிகம் செலவு செய்யுங்கள் என்றுவது நேரே சொல்லுகிறார்களல்லர். ஆனால், அவர்களுடைய ஜீவியம் அப்படி யிருப்பதனால், பிள்ளைகளும் அவர்களையே பின்பற்றுகின்றார்கள். நேர் நேராகச் சொல்வதிலும் பார்க்க முன்மாதிரியாகக் காட்டப்படுபவைகளே பிள்ளைகளின் மனத்தில் அதிகம் படியும். இவைகளே மிஷன் பள்ளிக்கூடத்திற் படிக்கும் பிள்ளைகளுக்கு உண்டாகும் தீமைகளில் இரண்டாவதாவன என்றனர்.

மூன்றாவதாக இந்துசமயத்தின் முக்கிய ஒழுக்கமாகிய அஹிம்சையினின்றும் விலகிவிடுகிறார்கள். உயிர்க் கிதம் செய்வதே புண்ணியம், இதம் செய்யாமையே பாவம் என்பதே சைவ சமயக் கொள்கை. மிஷன் பள்ளிக்கூடத்திற் படிக்கும் பிள்ளைகள் அஹிம்சையின் மகத்துவத்தைத்தானும் படிக்க இடமில்லை. உயிர்களுக்கு அகிதம் செய்யுங்கள் என்று மிஷனரிமார் படிப்பிக்கிறதில்லை. ஆனால் அவர்கள் 'வலிமையே நியாயம்' (Might is right) என்னும் கொள்கையைக் கையாண்டு வருவதனால் பிள்ளைகளும் அதனையே பின்பற்றுகிறார்கள்.

இந்தக் கொள்கையினாலேயே சில நாட்களுக்கு முன் நடந்த பாரிய யுத்தம் உண்டாயது. மிஷன் பள்ளிக்கூடத்திற் படிப்பதனால் சைவப் பிள்ளைகள் கெட்ட பழக்கங்களையே பின்பற்றுகிறார்கள் என்பதை மிகவும் வற்புறுத்திக் கூறினர். பெற்றோர் தம் பிள்ளைகளை மிஷன் பள்ளிக்கூடத்திற் கனுப்பிப் படிப்பித்துவிட்டு, தம் பிள்ளைகள் கீழ்ப்படிகின்றார்களில்லை என்றும், சைவசமயத்தின்படி ஒழுகுகின்றார்களில்லை யென்றும் கூறுகின்றார்கள். இக்குறை பெற்றோர்மே லன்றிப் பிள்ளைகள்மே லல்ல. மிஷன் பள்ளிக்கூடத்திற் பயிலும் பிள்ளைகள் எல்லாரும் சைவர்களாக இருந்தாலும் அவர்கள் சைவசமயத்தை அநுசரிப்பதமில்லை. அவர்களுடைய அருமையான சைவசமயம் மிஷன் பாடசாலைக் கல்வியால் அழிந்துவிடுகின்றது.

பின்னர் ஸ்ரீ அ. மகாதேவனவர்கள் சில குறிப்புரை கூறினர்.

அதன்பின்னர் ஸ்ரீ அ. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் மிஷன் கல்வியினால் உண்டாகும் நஷ்டங்கள் எவை எவை யென்பதை விளக்கமாகக் கூறி, இதுவரையும் மிஷன் பள்ளிக்கூடத்திற் படித்ததனால் பிள்ளைகள் கிறிஸ்தவராகாவிட்டாலும் அவர்களுடைய சைவம் பழுதடைந்துவிட்டதென்பதைப் பல நியாயங்களால் எடுத்துக் காட்டினர்.

மிஷன் பள்ளிக்கூடப் பிள்ளைகள் சைவப் பள்ளிக்கூடத்துக்குச் சென்றால், மிஷன் பள்ளிக்கூட உபாத்திமார் பிழைப்பின்றி இருப்பார்களே என்று சைவப் பெற்றோர் எண்ணுவது பெரும் பிழை என்றும், படித்த பள்ளிக்கூடத்திலேயே படிக்கவேண்டு மென்று எண்ணி மிஷன்பள்ளிப் பிள்ளைகளை சைவப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாது விடுவது தவறென்றுங் கூறினர்.

பின்பு அக்கிராசனராக விருந்த ஸ்ரீ ம. முத்துக்குமாரசாமிமுதலியாரவர்கள், பெற்றோர் சேர்ட்டிவிக்கற் கேட்டபொழுது மிஷன் பள்ளிக்கூடத் தலைவர் மறுத்தது பெருந் தவறென்றும், அது பிரித்தானிய ராச்சிய நீதிக்கு மாறென்றும் விளக்கிக் காட்டினர். மிஷனரிமார் எங்கள் நன்மையை விரும்பினால், நாங்கள் கல்வியை எங்கள் பிள்ளைகளுக்கு ஊட்டத் தொடங்குப்பொழுது அவர்கள் மகிழாது, எதிர்த்து நிற்பது ஏன். பிள்ளை வளர்ந்து நடக்கப் பயிலுவது தாய்க்கு மகிழ்வை யூட்டுமன்றோ? அதுபோல அவர்களிடம் படித்த நாங்கள் எங்கள் கடமையைச் செய்யத் தொடங்கினால் அவர்களும் மகிழவேண்டுமன்றோ என்றனர்.

பின்பு ஸ்ரீ பி. பொன்னையா (Goverment Surveyor) அவர்கள் பிரசங்கம் புரிந்த பெரியோர்க்கு நன்றி கூறினர். தேவார பாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது. கடித.

### பணமே தெய்வம்.

மகாத்மாவின் மூத்த புதல்வரான ராமதாஸ் அவர்கள் கூறியதாவது:—

இங்கிலிஷ்காரர்கள் வியாபாரக் கொள்கையையே அதிகமாகக் கொண்டவர்கள், நெப்போலியன் இங்கிலிஷ்காரர்களை வியாபாரச் ஜாதியார் என அழைப்பதாக என் தகப்பனார் அடிக்கடி சொல்வதுண்டு. அமெரிக்காவின் மாஜி பிரசிடெண்டுகளில் ஒருவரான க்ரூகர் அடிக்கடி ஓர் சிறு கதை சொல்வதுண்டாம். அவரை ஒருவர் சந்திரலோகத்தில் தங்கம் உண்டா என்றுகேட்டாராம். அதற்கு அவர் அநேகமாய் இருக்காது; இருந்தால் இத்தனைகாலம் இங்கிலிஷ்காரர்கள்தங்கள் ராஜ்யத்துடன்சேர்த்துக் கொள்ளாமலிருந்திருப்பார்களா?" என்றாராம். இக்கதையை என் தகப்பனார் பலதடவை சொல்வதுண்டு உலகம் முழுமையுமே தங்கள் சாமான்களின் வியாபார ஸ்தலமாக மாற்றிவிடவேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனர். "பணந்தான் அவர்களது பிரதான தெய்வம்" என்பதை மறக்காமல் மனதிலிருத்திக்கொண்டால் அவர்களது மனோபாவத்தை நாம் நன்கு அறிந்துகொள்ளலாம்."

### நாகரீக முழக்கம்.

தேசாய் அவர்கள் கூறியதாவது:—

"ஆனால் மகாத்மா காந்தி எல்லாக்குற்றத்தையும் இங்கிலிஷ்காரர்களின்பேரில் சுமத்தவில்லை. தற்கால நாகரீகமே அதற்குக் காரணமென அவர் கூறுகிறார். இந்த நாகரீகம் பேருக்குத்தான் நாகரீகமாயிருக்கிறதேயொழிய இதனால் ஐரோப்பாக் கண்டத்துச் ஜனங்கள் தினேதினே சீர்கேடடைந்து அழிவுற்றுவருகிறார்கள் என்பதே மகாத்மாவின் அபிப்பிராயம். உதாரணமாகத் தனது வாழ்நாளில் தங்கள் சரீரபோஷணையே பெரிதென அவர்கள் கருதியிருக்கிறார்கள். 100 வருடங்களுக்கு முன்பு அவர்கள் வசித்துவந்ததைவிட இப்பொழுது அவர்கள் இன்னும் பெரியவீடுகளிற் குடியிருக்கிறார்கள். இது அவர்களுக்கு நாகரீகமாகத் தோற்றுகிறது. ஆதிகாலத்தில் அவர்கள் உடுத்தியது தோற்சட்டை; கையில் ஏந்தின்ற ஆயுதம் ஈட்டி ஒன்றுதான். இப்பொழுது அழகிய கால்சராய்களைப் போட்டுக்கொண்டு சிறிய கைத்துப்பாக்கிகளை ஆயுதமாகக் கொண்டிருக்கிறார்கள். முன்பு ஜனங்கள் தாங்களே ஏர்பிடித்து உழுது வயலைப்பண்படுத்திவந்தனர்; ஆனால் இப்பொழுதோ என்ஜினின் உதவியால் ஒருவனே ஏராளமான பூமியை உழுது பெருந் திரவியஞ் சேர்த்துவிடலாம். இதெல்லாம் நாகரீகமாக முழங்கப்படுகிறது.

### புது நூல்களும் புதிய தொழில் முறைகளும்.

"பண்டைக்காலத்தில் வெகு சிலரே புத்தகங்கள் எழுதி வெளியிட்டனர். அப்புத்தகங்களும் வெகு அருமையானவிஷயங்களைக் கொண்டவைகளாயிருந்தன. ஆனால் இப்பொழுதோ யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் எழுதி அச்சடித்து வெளியிட்டு பொது ஜனங்களின் மனோபாவத்தைக் கெடுத்துவருகிறார்கள். முற்காலத்தில் சண்டைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பாக ஒவ்வொரு கட்சியாரும் தங்கள் சைன்யத்தின் சரீர பலத்தை முதலிற் தெரிந்துகொள்வார்கள். ஆனால் இக்காலத்திலோ மஷீன் பீரங்கிகளின் உதவியைக் கொண்டு ஒருவரே1000பேரை மண்ணுலகினின்றும் விண்ணுலகிற் கனுப்பிவிடலாம். முன்பு மனிதர்கள் நிலங்களில் எவ்வளவுநேரம் வேலை செய்யக் கூடுமோ, அவ்வளவுநேரம்மட்டும் வேலைசெய்துவந்தார்கள். ஆனால் இப்பொழுது ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தொழிற்சாலைகளான பெரியகட்டடங்களிற் கூடிக்கொண்டு குறிப்பிட்ட காலம்வரையில்வேலைசெய்து வருகிறார்கள். இக்காலத்தவர்கள் பணத்திலும் பணத்தாற் கிடைக்கும் போகபோக்கியங்களிலும் மயங்கிக்கிடக்கின்றனர். ஆனால் மகாத்மா காந்தி இவ்வித நாகரீக மாறுபாட்டிற்காக இங்கிலீஷ்காரர்களைக் குற்றங்கூறவில்லை. அவர்களின்பேரில் அனுதாபங் கொள்ளுகிறார், இங்கிலீஷ்காரர் கெட்டிக்காரர்கள். அதனால் அவர்கள் சீக்கிரத்தில் உணர்ந்து இக்கெடுதல்களை விலக்கிவிடுவார்களென நம்புகிறார்.

## புகையிரதத்தின் கெடுதி.

புகையிரதவசதியிருப்பது கூடாதென்றுதான் இன்னமும் மகாத்மா அபிப்பிராயப்படுகின்றாரா வென நான் கேட்க, "ஆம்! அவர் இன்னமும் அவ்விதமேதான் அபிப்பிராயப்படுகிறார். பிளேக்போன்ற கொள்ளைநோய்களைப் பரப்புவதும், பஞ்சத்திற்கும் வறுமைக்கும் காரணமாயிருப்பதும் புகையிரதவசதியேயாகுமென்பது தான் அவரது திடமான அபிப்பிராயம். புகையிரதவசதியிருப்பதால்தூரதேசங்களுக்குத்தானியங்களை யனுப்ப வியாபாரிகள் விவசாயிகளை அண்டிப் பணங்கொடுத்துத் தானியங்களைவாங்குகிறார்கள். மழைக்காலத்திற்குத்தானியம் வேண்டுமேயென்பதைக் கருதாமல் விவசாயிகளும் விற்றுவிட்டுப் பின்னர் பட்டினியால் வாடி வதங்குகிறார்கள். அதிக விலைகொடுத்துத் தானியங்களை வாங்கி அதனாற் கடனாளிகளாய்ப்போகிறார்கள். நத்தைபோல மெதுவாகக் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பிரயாணஞ்செய்வதே மேல். புகையிரதத்தின் உதவிவேண்டிய அவசியமில்லை. நன்மை செய்ய விரும்புகிறவர்கள் அவசரப்படமாட்டார்கள். நல்லது மெதுவாகத்தான் கிடைக்கும். கெடுதலே வெகு வேகமாய் எங்கும் பரவக்கூடியது. ஆகவே வேகமாய்ச்செல்லும்புகையிரதமானது கெடுதலையே பரப்பக்கூடியதாயிருக்கிறது" என்று பதிலளித்தார். ஸ.போதினி.

## இந்தியாவும் பிரித்தானியா ஆட்சியும்.

ராயல் கலோனியல் இன்ஸ்டிடியூட்டில் இந்தியா மந்திரியான லார்ட்டு பீலின் அக்கிராசனத்தின் கீழ் ஸர். வில்லியம் வின்செட் (இந்தியா கவர்ன்மெண்டின் மாஜி நிர்வாக அங்கத்தினர்) இந்தியாவில் பிரித்தானியர் செய்யும் வேலைகளை சில இந்திய ராஜீயவாதிகளும் ஆங்கில ராஜீயவாதிகளும் கண்டித்துப் பேசுவதை எல்லாம் மறுக்க ஒருபிரசங்கம் செய்தார். அப்பொழுது அவர் கூறியதாவது:—குறைந்த பக்ஷம் சில அம்சங்களிலேனும் இந்தியாவிலுள்ள அரசாங்க உத்தியோகஸ்தர்களானஐரோப்பியர்கள் ஏகாதிபத்தியத்துக்குச் சிறந்த சேவை செய்திருக்கின்றார்கள். அவர்கள் திறமையாகவும் நேர்மையாகவும் நிர்வாகத்தை நடத்தவும் தேச நலத்தை அபிவிருத்தி செய்யவும் நீதி வழங்கவும் துன்புறுத்துவதையும் அயோக்கியத் தன்மையையும் போக்கவும் தான் அவர்கள் முயன்று வந்திருக்கிறார்கள். அவர்கள் இந்தக்கடமையை நிறைவேற்றுவதில் தங்களது உயிரையும் குடும்ப பந்தங்களையும் தியாகஞ் செய்யவேண்டியிருக்கின்றது. அவர்கள் அடிக்கடி லாபம் வரக்கூடிய காரியங்களைக் கூடக் கைவிட்டுவிட நேரிடுகின்றது. பிரித்தானியர் இந்தியாவின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்ட பொழுது இருந்ததை விட தற்பொழுது நாடு அதிகசெழிப்புள்ளதாயும் இருக்கின்றது. நாங்கள் செய்யத் தவறிய காரியங்கள் சில உள்ளன என்பதையும் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். உம்முடைய ஆரம்பக் கல்வி முறையில் நாம் தோல்வியுற்றிருக்கின்றோம். விவசாய அபிவிருத்திக்காக அதிகமான பணத்தையும் காலத்தையும் செலவழிக்க வில்லை. ஜனங்களுக்கு இராணுவத்திற்கு வேண்டிய பயிற்சி அளிக்கவில்லை. நிர்வாகத்தை ஏற்றுக் கொள்வதற்காக அவர்களுக்கு வேண்டிய சந்தர்ப்பங்களும் அளிக்கவில்லை. நாம் ஸ்தல சுய ஆட்சி முறையில் அபிவிருத்திகள் செய்யவில்லை நாங்கள் ஜனங்களை சுய ஆட்சி பெறுவதற்கு தகுந்ததாக இருக்கும்படி தயார் செய்யவில்லை. இந்தவிடங்களில் எல்லாம் நாங்கள் எங்களது கடமையைச் செய்யத் தவறிவிட்டோம் என்று கருதுகின்றேன். நாங்கள் இந்தியர்களது உதவியைச் சரியானபடி பாராட்டவில்லை என்றும் அவர்களது அறிவையும் புத்திமதிகளையும் தக்கபடி மதிக்கவில்லை என்றும் ஜனங்களுடன் சம்பந்தமில்லாமல் தனித்து ஏதோ சாதியதிகாரம் நடத்தும் முறையைச் சிருட்டித்திருக்கின்றோமென்றும் சரித்திராசிரியர்கள் குறை கூறுகிறார்கள். சமூக ஆசார சீர்திருத்தவிடயத்திலும் தொழிலாளர் சம்பந்தமான சட்ட விடயங்களிலும் மிகுந்த ஜாக்கிரதையுடன் இருந்து வந்திருக்கின்றோம். நமது ஆட்சிமுறையானது மிகுந்த செலவை உண்டாக்குகின்றது. இராணுவச் செலவு மிகவும் அதிகம். நாம் இந்தியர்களுக்கு உயர்ந்த பதவிகள் அளிப்பதில் மிகவும் மெதுவாக இருந்துவந்திருக்கின்றோம். அவர்களது திறமையைக்குறித்து அனாவசியமாகச் சந்தேகங்கொண்டுவந்திருக்கிறோம். அவற்றின் பலனைத்தான் நாம் அனுபவித்து வருகின்றோமென்றும் கூறப்படுகின்றது. நாம் செய்யத் தவறியவற்றைவிடச் செய்தவைகளே அதிகமாக இருக்கின்றன. பாமர ஜனங்களது நன்மைக்காக இந்தியாவை ஆள நாம் செய்த முயற்சியில் தவறிவிடவில்லை. இந்தியாவின் எதிர்கால நிலைமை எப்படியிருந்தபோதிலும் நமக்குப் பின்வருகின்றவர்கள் நமது வேலைகளைக் குறித்துப் பெருமைகொள்ளக்கூடும். பிரித்தானியர் இந்தியாவில் செய்த ஆட்சியானது இந்தியாவிற்கும் பிரித்தானியா ஏகாதிபத்தியத்திற்கும் மிகுந்த நன்மையைச்செய்து பிரித்தானிய அரசாங்கத்திற்கும் இந்தியாவிலுள்ள பிரித்தானிய உத்தியோகஸ்தர்களுக்கும் வியாபாரிகளுக்கும் கீர்த்தியை அளித்திருக்கின்றது என்று கூறினர்.

அக்கிராசனர் பில்ட்பிரபு கூறியதாவது:—

அந்நிய ஜாதியார்கள் வேறு நாட்டாரை ஆளுவதே கெடுதலானது என்று நினைக்கிறவர்கள் இருக்கிறார்கள். பிரித்தானியா ஆட்சியைக் கண்டிப்பவர்களில் பெரும்பான்மையோர் இம்மாதிரியான சித்தாந்தமுடையவர்களாக இருக்கின்றனர். நான் சம்பந்தப்பட்டமட்டில் அம்மாதிரியான சித்தாந்தமுடையவனல்ல. இந்தியன் ஸிவில் சர்வீஸ் வகுப்பினரைப்போல நிர்வாக விஷயத்தில் கைதேர்ந்தவர்களாயும் நல்லவர்க்கத்தினராயும் உள்ள ஸிவில் சர்விஸர்கள் இதர தேசங்களில் இருந்தால் அவை எவ்வளவு நன்மை அடைந்திருக்குமென்பதைப்பற்றி நான் சிந்தனை செய்ததுண்டு. இவர்கள் நீதி நெறி வழுவாதவர்கள். தங்களது தேசிய உணர்ச்சிக் குட்படாதவர்கள். வேறு சில கோஷ்டியார்கள் மேனாட்டு நாகரிகமும் கீழ்நாட்டு நாகரிகமும் ஒன்று கலந்ததால் மிகவும் கேடு ஏற்பட்டதாகக் கருதுகின்றனர். அம்மாதிரி இரண்டு நாகரிகங்களும் ஒன்று சேருவது இன்றியமையாததனவென்று நான் கருதுகிறேன். மற்றவர்கள் எவ்வளவு திறமையான பிரதிநிதித்துவம் வாய்ந்த சபைகள் ஏற்பட்டபோதிலும், இந்திய ஜனங்களுக்கு ஏற்றதாக இல்லையென்று கூறுகின்றார்கள்.

நான் சென்ற வருடம் இருந்ததுபோல் இந்த வருஷம் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஸ்தாபனங்களை அவ்வளவு பாராட்டுகின்றவனாக இருக்கின்றேனென்பது எனக்கு நிச்சயமாகத் தோற்றவில்லை. (நகைப்பு) கண்டனக்காரர்கள் சரியாக இருந்தபோதிலும் அவர்களை ஆதரிக்கும் இந்திய ராஜீய வாதி எவரும் இல்லை. இந்திய ராஜீய வாதிகள் பிரதிநிதித்துவ பாத்தியதைகள மிகவும் குறைவாக இருக்கிறதென்றும் சுய ஆட்சி அளித்திருந்தால் இந்தியாவில் எல்லாம் செவ்வையாக நடைபெற்றிருக்குமென்றும் கூறினார்கள். இந்தியா கைத்தொழில் விஷயத்தில் முன்னேற்றமடைந்திருக்கின்றது. இந்தியா 427 கோடி ரூபாய் கடனிருக்கும்பொழுது 2320 லக்ஷம் பவுண் சென்ற வருஷம் கடனாகப் பெற்றிருக்கிறது. இந்தியா தற்பொழுது இஷ்டப்பட்டவிடங்களில் கண்டிராக்ட்டெடுக்கலாம். பிரித்தானியா சப்பற்படைக்காகும் செலவில் பெரும்பான்மையானவற்றை கொடுக்கின்றனர். ஸிவில் சர்விஸ் வர்க்கத்தில் ஓரளவு இந்தியர் சேர்க்கப்பட்டிருப்பதால் பிரிட்டிஷார்தான் அதில் இருக்கிறார்கள் என்பது பொய் என்றும் அவர்கள் இந்தியர்களது உதவி பெற்று இந்தியாவை ஆட்சி செய்ய விரும்புகின்றார்களென்பதும் தெரிய வருகின்றது. பணமுடை ஏற்பட்ட காலத்திற்குப் பின்னர் சீர்திருத்த முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது மிகவும் வருந்தத்தக்க விஷயமேயாகும். இதர குடியேற்ற நாடுகளில் இந்தியர்களை எவ்வாறு நடத்துவதென்பதைப்பற்றிய கஷ்டமான கேள்விகளும் தற்பொழுது புதிதாக ஏற்பட்டுள்ளது. ஏகாதிபத்திய மகா நாட்டில் குடியேற்ற நாட்டவர்கள் மிகுந்த அனுதாபம் காட்டியதற்காக அந்நாட்டுப் பிரதிநிதிகளை நான் பாராட்டுகிறேன்.

இந்தியர்கள் ஏகாதிபத்தியத்திற்குட்பட்ட தேசத்தவராக இருக்கவேண்டுமென்றும் அவர்கள் நியாயமாகவும் சமத்துவமாகவும் நடத்தப்படுவார்களென்று ஏகாதிபத்திய மகாநாடு அவர்களுக்குக் காட்டிவிட்டது. சென்ற 5 வருஷ காலமாக பம்பாய் கவர்னராக விருந்த ஸார் லாயிட் ஜார்ஜினது ஊக்கத்தையும் குணங்களையும், அதிகாரஞ் செலுத்திய பான்மையையும் நான் பாராட்டுகிறேன்.

பிறகு நடந்த வாதத்தில் ஸார்ட் மெஸ்டனுடன் ஸார் மைக்கேல் ஒட் வியரும் ஸார் சார்லஸ் மாக்லியாரும் கலந்துகொண்டார்கள். இவர்களது பிரசங்கங்களுக்கு விடை யளிக்கையில் ஸார் வில்லியம் வின்சண்ட் கூறியதாவது: இந்தியாவிற்கு பிரித்தானியா சீர்திருத்தமளித்திருக்கிறது. பிரித்தானியா இந்தியாவுக்கு சில வாக்குறுதிகளையும் அளித்திருக்கிறது. அதனை விட்டுவிட்டுபிரித்தானியாபின்வாங்கிக்கொள்ள முடியாது. சீர்திருத்தத்தை அதிகப்படுத்துவதால் உண்டாக்கக் கூடிய அபாயங்கள் இந்திய நிர்வாகத்தில் சம்பந்தப்பட்டிருந்தவர்களுக்குத் தெரிவதுபோல் எவருக்கும் தெரியாது. இந்தப் புதியமுறை நன்மைக்கு ஏற்பட்டிருக்கின்றதோ. இம்முறையில் ஏதேச்சாதிகார முறையைக்கையாளுவது என்பது முடியாது. நாம் காலத்திற்குத் தகுந்தபடி மாறிக் கொள்ள வேண்டும். நாம் சீக்கரம் மாறினால் எதிர்காலத்தில் நல்ல சம்பந்தமேற்படக் கூடும்.

திராவிடன்.

## விளம்பரம்.

### பிரவேச வகுப்பு.

இவ்வகுப்பு வழக்கம்போலக் கோப்பாய்ச் சைவவித்தியாசாலையில் 1924-ம் ஆண்டு தைமீ 1உ தொடக்கம் நடைபெறும். இதிற்சேர விரும்புவோர் இம்மாசம் 28ந் திகதிக்குப் பிந்தாமல் தங்கள் வயசு, ஈற்றிற் சித்தியெய்திய வகுப்பு, விலாசங்களுடன் விண்ணப்பப்பத்திரங்களை அனுப்புக.

கோப்பாய், 17—12—23. மு. சுவாமிநாதன், (Mis. 417.)

## விளம்பரம்.

காலால் வேலை செய்யக்கூடியதும் டெம்பி அரைத்தாள் அடிக்கக்கூடியதுமான அச்சியந்திரம் ஒன்று விற்பனவுக்கு இருக்கிறது.

இப்போ நல்ல நிலைபரத்தில் வேலை செய்துகொண்டிருக்கிறது.

வேண்டுவோர் கீழ்க்காணப்படும் விலாசத்திற்கு விலைவிபரத்திற்கு எழுதவும்.

S. S. சண்முகம்,
சண்முகநாத புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.
(M. 30.)

## ஓர் பிராமணோத்தமர் தேவை.

சிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் கோலாலம்பூர் 'ஸ்கொற்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்றாயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குடும்பத்தைச்சேர்ந்தவராயுமிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப(துவஜாரோகண)த்துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
காரியதரிசி.
(Q. 45)

## "நவ சக்தி"

### வார மும்முறைப் பதிப்பு.

சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா | ... | ரூபா 15 | 0 |
| ஆறுமாத சந்தா | ... | ,, 7 | 8 |
| மூன்றுமாத சந்தா | ... | ,, 4 | 0 |
| மாத சந்தா | ... | ,, 1 | 8 |

சிங்கப்பூர் பினங்முதலிய வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூபா 20.

விளம்பர விகிதம்.

மும்முறைப் பதிப்பு.

| | | |
|---|---|---|
| கலம் 1-க்கு நாள் ஒன்றுக்கு | 8 | 0 |
| சில்லறை விளம்பரம் அங்குலம் 1-க்கு | 0 | 10 |

வாரப் பதிப்பு.

| | | |
|---|---|---|
| கலம் 1-க்கு வாரம் 1-க்கு | 7 | 0 |
| சில்லறை விளம்பரம் அங்குலம் 1-க்கு | 0 | 8 |

நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் நேரே எங்கட்கு எழுதவும்.

மானேஜர் "நவசக்தி",
இராயப்பேட்டை, சென்னை.

பல தலைமுறையாய் பிரபலபிரசித்தியடைந்த
வீ. ஸாமி அய்யங்காருடைய
## அறைக்கீரைவிரைத்தைலம்.




இதன் குணம்:

பித்த மேகநீரானது சிரசுக்கேறி அதனாற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணிலிருந்து நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினால் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்துவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடுங் கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், கொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதுமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும். இந்த நோட்டீசில் காணப்படாத கழுத்திற்கு மேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப்படுத்தும். மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினால் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்துகொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாறாது. அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங் கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0.

கும்பகோணம்
வி. எஸ். கோமளத்தம்மாள்,
மானியபாக்யசார்,
8, பிராடீஸ் ரஸ்தா, மைலாப்பூர்.
(Y. 26.)

## "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் முதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

## "லோகோபகாரி".

28-வருஷகாலமாக இது தமிழுலகமெங்கும் உலவி வருகிறது. இதில் வேதாந்த விஷயங்களும் எளிய தமிழில் எழுதப்படும் சமாசாரங்களும் இனிய பாடல்களும் சித்திரபடங்களும் வெளிவரும். உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி இப்பத்திரிகை எவருக்கும் அச்சமின்றி, உண்மையைக் கடைப்பிடித்து நடுநிலையான அபிப்பிராயங்களை வெளியிட்டுவரும். நாட்டிலே புத்துயிர் ஏற்பட்டு இந்தியர் சுயராஜ்ய பதவி யடைந்து ஞாலமெல்லாம் இன்பம் அடைய வேண்டுமென்பதே "லோகோபகாரி" யின் முக்கிய நோக்கம் ஸ்ரீமாந். பரலி. சு. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இதன் ஆசிரியராக இருக்கின்றார். தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும். வருஷ சந்தா ரூபா நான்கே. வெளிநாட்டிற்கு ருபா ஆறு, மாதிரிப்பிரதி இனாம்,

காரியஸ்தர், "லோகோபகாரி"
கோமளேஸ்வரன் பேட்டை, சென்னை.

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

### புஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரு. 10. 50-மாத்திரை ரு. 4 0-0
20-மாத்திரை ரு 2. வி. பி. சார்ஜ்வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும், தொத்து நோய், அவமிருத்து தோஷம், மோகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், நேட்டால், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
பழனி. S. I.
(Q. 40)

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவ நீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.